கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்

வழக்கு எண் MCOP No. 25/2023

நாள் 21.09.2024

**<u>மனுதாரர் தரப்பில் மசாஆ 1 ஆஜராகி 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

(ம.சா. 1 – சரோஜா முன்னிலையானார்.

**<u>2ம் எதிர்மனுதார் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தை பற்றி எனக்கு ஊர்க்காரர்கள் சொன்னார்கள், ஊர்க்காரர்கள் பெயர் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் விபத்து சம்பந்தமாக நான்தான் புகார் கொடுத்தேன். விபத்தை நேரடியாக பார்த்த யாரையாவது சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. விபத்தை நடந்த இடத்தை நான் பார்த்தேன், அது கிழமேல் ரோடு என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் சிவா ஹோட்டல் அருகில் என்றால் சரிதான். அந்த ஹோட்டல் ரோட்டுக்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது மகனை இடித்ததாக சொல்லப்படும் வாகனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வரும் வாகனங்களுக்கு ரோட்டின் தெற்கு பக்கம்தான் இடது பக்கம் என்றால் சரிதான், அதனால் காரை ஓட்டி வந்த நபர் இடது பக்கமாக சாலை விதிகளை கடைபிடித்து காரை ஓட்டி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ரோட்டை கடக்கும்போது விபத்து நடந்தது என்று சொன்னால் சரிதான். கார் ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்து சரியாகத்தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றாலும், இந்த விபத்திற்கு எனது மகன்தான் காரணம் என்று சொன்னாலும்

சரியல்ல. எனது மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் இல்லை. எனது மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றாலும், விபத்து சமயத்தில் மது அருந்திவிட்டு இரு சக்கர வாகனத்தை ஓட்டியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் வத்தலக்குண்டு மருத்துவமனையில் எனது மகனை சேர்த்தார்கள், அங்கிருந்து பின்னர் தேனி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள், அதன் பிறகு மதுரை பிரீத்தி மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு வைத்து3 நாட்கள் வைத்து எனது மகன் இறந்து விட்டார். வத்தலக்குண்டு மருத்துவமனையில் எனது மகனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மது அருந்திவிட்டுதான் எனது மகன் இரு சக்கர வாகனத்தை ஓட்டினார் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மகன் மது அருந்திவிட்டுதான் வாகனத்தை ஓட்டினார் என்று வத்தலக்குண்டு மருத்துவமனையில் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளதால்தான் அந்த ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனம் எனது மகனுக்கு பாத்தியப்பட்டதாகும். எனது மகனுக்கு இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனது மகன் ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனத்திற்கு காப்பீடும் இல்லை, பதிவுச் சான்றிதழும் இல்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் தலைகவசம் அணியவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பல்வேறு தலைப்புகளின்கீழ் நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், அது எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. விபத்தின்போது எனது மகனுக்கு வயது 39 ஆகும், அவருக்கு

திருமணம் ஆகவில்லை. அவர் தென்னை மரம் ஏறும் தொழில் செய்து வந்தார் என்பதற்கு எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து எனது மகனின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும் காரணம் என்றாலும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது மகன் ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
21.9.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.